# IAMWARM PROJECT

## நீர்வள நிலவளத் திட்டம்



நீர் ஆதார அமைப்பு



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்



வேளாண்மை



தோட்டக்கலை

ஒவ்வொரு துளி நீரிலும் அதிக வருமானம்



வேளாண்மைப் பொறியியல்



வேளாண் விற்பனை



மீன்வளம்



கால் நடை பராமரிப்பு

## பல்முனைத் திட்டப் பிரிவு

### நீர்வள ஆதாரத்துறை

# நீர்வள நிலவளத் திட்டம்

## முன்னுரை:

தமிழ்நாட்டைப் போன்ற வேளாண்மை சார்ந்த மாநிலத்தில் வேளாண் உற்பத்தித் திறனையும் வருமானத்தையும் அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்வது அவசியமாகும். வேளாண்மையின் வளர்ச்சியானது நீரினைப் பயன்படுத்துதல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதைச் சார்ந்து உள்ளது. இதனை அடைந்திட, பாசன மேலாண்மை மற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைத்திடும் வகையில் நீர்வள அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளை ஒருங்கிணைத்தல் அவசியமாகிறது.

இந்தியாவில் உள்ள வரட்சி மிகுந்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இங்கு ஆண்டிற்கு 925 மில்லி மீட்டர் அளவே மழை கிடைக்கிறது. தமிழ்நாட்டின் மக்கள் தொகை சுமார் 62 மில்லியன் ஆகும். இந்திய அளவில் சராசரியாக ஒரு நபருக்குக் கிடைக்கும் நீர் அளவான 2,200 கன மீட்டருடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் தனி நபருக்குக் கிடைக்கும் நீர் அளவானது ஆண்டிற்கு 900 கன மீட்டர் அளவேயாகும். தமிழ்நாட்டைப் பூகோள ரீதியில் 17 ஆற்றுப்படுகைகளாகப் பிரிக்கலாம் [127 உபவடி நிலங்கள்]. அவற்றில் பெரும்பாலானவை நீர் பற்றாக்குறையுடன் உள்ளவை. இம்மாநிலத்தில் 70 பெரிய நீர்த்தேக்கங்கள், சுமார் 40,000 ஏரிகள் [காலங்காலமாக உள்ள நீர்நிலைகள்] மற்றும் சுமார் 30 இலட்சம் கிணறுகள் உள்ளன. இவைகளில் அதிகப்படியான மழைநீர் சேகரிக்கப்படுகிறது. மாநிலத்தில் அதிகப்படியாக 75 சதவீதம் நீர் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படுகிறது. 30 லட்சம் ஹெக்டேர் பாசனப்பரப்பில் 30 சதவீதம் கால்வாய் பாசனம் மூலமாகவும், 21சதவீதம் ஏரிப் பாசனம் மூலமாகவும், 49 சதவீதம் கிணறுகள்



மூலமாகவும் பாசனம் பெறுகின்றன. மீதமுள்ள பரப்பு ஓடைகள் மற்றும் ஊற்றுக்கள் போன்ற ஏனைய நீராதாரங்கள் மூலம் பாசனம் பெறுகின்றன.




பாசன நிலங்களுக்கு முதுகெலும்பாக உள்ள பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல் மற்றும் சீரமைத்தல் மிகவும் அவசியம். பாசன கால்வாய் அமைப்புகளைப் புனரமைத்து அதன் பழைய நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் குளங்களைப் புதுப்பித்தல் இதில் அடங்கும்.

இந்த நோக்கத்துடன், சம்மந்தப்பட்ட அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து, நீர்வள நிலவளத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உபவடி நில கட்டமைப்பு முறையில், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மைமூலம் பாசன சேவை மற்றும் பாசன வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## இத்திட்டத்தின் நோக்கங்கள்:

- நவீன நீர் சேமிப்புப் பாசன தொழில் நுட்பங்கள் பயன் படுத்துதல் உள்ளிட்ட பாசன சேவை முறையை மேம்படுத்துதல்.
- நீர் பயனீட்டாளர்கள் சங்கம் அமைத்தல் மற்றும் நீர்வள மேலாண்மையில் விவசாயிகளை ஈடுபடுத்துதல்

- வேளாண்மையைத் தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்றுப்பயிர் சாகுபடி செய்தல்.
- நீர்வள மேலாண்மையில் ஈடுபடும் நிறுவனங்கள் மற்றும் வரைமுறைகளைப் பலப்படுத்துதல்
- 63 உபவடி நிலங்களில் உள்ள பாசன அமைப்புகளைக் கொண்டு பயன்பெறும் பாசனப் பரப்பை அதிகரித்தல் மற்றும் பாசனத்தை உறுதி செய்தல்.
- வேளாண் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் பயன்பெறும் உழவர்களின் வருவாயை அதிகரித்தல் [அளிக்கப்படும் ஒரு கனமீட்டர் நீரின் விலைக்கான நிகர லாபம்]
- வேளாண்மையைச் சார்ந்த இதர தொழில்களான மீன் வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவைகள்மூலம் பண்ணை வருவாயினை அதிகரிக்கச் செய்தல்.
- விற்பனை செய்யும் வகையில் மகசூலைப் பெருக்குதல் மற்றும் விளைபொருட்களை அதிகமாகச் சந்தைக்குக் கொண்டு வரச்செய்தல்.
- நீர் ஆதார மேலாண்மைக்குத் தேவையான மேம்பட்ட அடிப்படை விவரம் மற்றும் பகுப்பாய்வுத் திறனை மேம்படுத்துதல்

## திட்ட கண்ணோட்டம்:

2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இத்திட்டம் ஆறு ஆண்டுகளில் செயல் படுத்தப்படும். நீர்வள ஆதாரத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண்மை விற்பனைத்துறை, கால்நடைபராமரிப்புத் துறை மற்றும் மீன் வளத்துறை ஆகியவைகள் ஒருங்கிணைந்து 566 மில்லியன் அமெரிக்க டாலர் [ரூ.2547 கோடி] மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 63 உபவடி நிலங்களில் 9 உபவடி நிலங்கள் முதல் ஆண்டிலும் 16 உபவடி நிலங்கள் இரண்டாம் ஆண்டிலும் மற்றும் மீதமுள்ள 38 உபவடி நிலங்கள் மூன்றாம் ஆண்டிலும் எடுத்துக் கொள்ளப்படும்.



# திட்டப் பணிகள்

## இனம் – அ : பாசன அமைப்புகளை நவீனப்படுத்துதல்

63 உபவடி நிலங்களில் உள்ள விவசாயிகளுக்கு அளிக்கப்படும் நீர் விநியோகத்தினை மேம்படுத்த பாசன அமைப்புகளை நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவையினை அளித்தல். நீர்வள ஆதாரத்துறையின்மூலமாக இச்செயல்பாடுகள் இரண்டு உட்பணிகளாக மேற்கொள்ளப்படும். அவையாவன:

- நீர் சேதாரத்தைத் குறைக்கவும் மற்றும் ஏரியிலிருந்து நீரினைக் கொண்டு வரும் திறனை மேம்படுத்தவும் தேவையான சீரமைப்புகளை மேற்கொள்ளுதல்;
- வரத்து கால்வாய்களைச் சீராக்குதல் மற்றும் தூர் வாருதல் மூலமாக நீர்நிலைகளில் [ஏரிகள்] கொள்ளளவினை மேம்படுத்துதல் மற்றும் புனரமைத்தல்.
- அதி உபயோக வட்டாரங்களில் நிலத்தடி நீரினைச் சேகரிக்கும் கட்டமைப்புகளை அமைத்தல்.
- சுற்றுச்சூழலைக் கணித்தல் மற்றும் உபவடிநிலங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்க முன்னேற்பு ஆய்வு மேற்கொள்ளுதல்.

செயலக்கத்திற்கு முன்பு



செயலாக்கத்திற்கு பின்பு



மாநிலத்திலுள்ள பாசன ஆதாரங்களின் முக்கியப் பகுதியான நீர்நிலைகளைப் புதுப்பிக்க இத்திட்டம் முனைகிறது. இந்த நீர்நிலைகளினால் பயன்பெறும் விவசாயிகள் தொடர்ந்து பயன்பெறும் வகையில் ஏரிகள் புதுப்பிக்கும் பணியில் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

### இனம் – ஆ: வேளாண்மையைத் தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்றுப்பயிர் செய்தல்:

உபவடி நிலங்களில் நல்ல தொழில்நுட்பத்துடனான பாசனப் பரப்பு அதிகரிப்பு மற்றும் மாற்றுப் பயிரிடுதல் வாயிலாக வேளாண்மை சார்ந்த தொழில்களில் உற்பத்தித்திறனை அதிகரிக்கப் பணி [அ]–ல் குறிப்பிட்ட மேம்படுத்தப்பட்ட நீர் விநியோகம் தேவைப்படுகிறது.

வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு சம்மந்தப்பட்ட செயல் விளக்கங்கள் மூலமாகவும் வேளாண் வணிகத்தை மேம்படுத்துதல் மூலமாகவும் அப்பொருட்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தலாம்.

## பல்வேறு துறைகளின் செயல்பாட்டு விவரங்கள்

### வேளாண்மைத்துறை:

- சோதனை மற்றும் செயல்முறை விளக்கங்கள் வழியாக தொழில்நுட்பங்களை ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வயலுக்குக் கொண்டு வருதல்.
- நுண்ணூட்டச்சத்துக்கள், வீரிய ஒட்டு விதைகள், உயிரின உரங்கள் மற்றும் உயிரின பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகிய முக்கிய இடுபொருட்களை அறிமுகப்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் பொருளாதார மேம்பாடு அடைதல்.
- விவசாயப் பணிகளின் திறனை மேம்படுத்திச் சிரமத்தைக் குறைக்கும் வகையில் வேளாண் கருவிகளை விநியோகித்தல்.
- இயற்கை வழி வேளாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு நிர்வாகம் ஆகியவை மூலம் வேளாண்மையில் நிலையான மேம்பாட்டை உருவாக்குதல்.







### தோட்டக்கலைத்துறை:

- சந்தை வாய்ப்புள்ள பயிர்களைக் கண்டறிந்து அவைகளை உற்பத்தி செய்தல்.
- அதிக லாபம் அடைய அதிக மகசூல் கிடைக்கும் பயிர்களைப் பயிரிடுதல்.
- அதிக உற்பத்தித்திறன் பெற சரியான மற்றும் அதிக எண்ணிக்கை நடவினைக் கடைப்பிடித்தல்.
- ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி நோய் தடுப்பு நிர்வாகம்மூலம் மண்வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுச் சூழலுக்கேற்ற தொழில்நுட்பத்தை கடைப்பிடித்தல்.

## வீரிய ஒட்டுப் பழ வகைகள் மற்றும் காய்கறிகள்





## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்:



- இரகம் மற்றும் உழவியல் முறைகள்பற்றிய ஆராய்ச்சி முறைகளை அனுசரணை ஆராய்ச்சி முறைகள் மூலம் வயல்களில் செயல்படுத்துதல்.
- முதல் நிலை செயல்விளக்க முறைகள் அமைத்து, துல்லிய சாகுபடி உடன் கூடிய முன்னேற்றத் தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், ஒருங்கிணைந்த உர நிர்வாகம் ஆகிய தொழில்நுட்பங்களைப் பரப்புதல்.
- சொட்டு நீர் பாசனமுறையில் உரமிடல், செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் ஆகியவைகளை அதிகப் பரப்பில் கடைப்பிடித்தல்.
- வியாபார ரீதியான வேளாண்மையை மேம்படுத்துதல், அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

## வேளாண்மை பொறியியல் துறை:

- நுண் பாசன முறைமூலம் பாசன திறனை அதிகரித்தல்
- குழாய்கள் பதிப்பதன்மூலம் வயல்களுக்கு நீர் எடுத்துச் செல்லும் திறனை அதிகரித்தல்.
- பண்ணைக்குட்டைகள்மூலம் நிலத்தடி நீர் வளம் சேர்த்தல்.







## வேளாண்மை விற்பனை:



- விவசாயிகளுடன் இணைந்து அறுவடை செய்த வேளாண் விளைபொருட்களுக்கு அதிக மதிப்புக் கூட்டுதல்.
- அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்,சேமிப்பு வசதிகளைப் பெருக்குதல் மற்றும் குறைந்த விலைக்கு விற்பனை செய்தலைத் தவிர்த்தல்.
- அழுகக்கூடிய பொருட்களைச் சேகரித்து, அவைகளை நல்ல விலைக்கு விற்கத் தேவையான போக்குவரத்து நடவடிக்கைகளை, கூடுதல் வருவாய் பெற மேற்கொள்ளுதல்.

## கால்நடைப் பராமரிப்புத் துறை:

- தற்பொழுதுள்ள உள்ளூர் கால்நடைகளின் தரத்தை மேம்படுத்துதல்
- கால்நடைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்
- கால்நடைகளுக்குத் தேவையான நுண்ணூட்டச் சத்து நிர்வாகத்தை அதிகரித்தல்



- வேலை இல்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளித்து அவர்களைக் கால்நடை வளர்ப்பில் தொழில் முனைவோராக ஈடுபடுத்துதல். விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் வாயிலாக அவர்களது விழிப்புணர்வு மற்றும் அறிவுத்திறனை உயர்த்துதல்.

## மீன்வளத் துறை:



* பாசன ஏரிகளில் நிலையான மீன் வளர்ப்பு,
* பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்ப்பின்மூலம் விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாய்.
* தரமான மீன் குஞ்சுகளைக் கிடைக்கச் செய்தல்
* வண்ணமீன் வளர்ப்புமூலம் வேலைவாய்ப்பு
* சுகாதாரமான முறையில் மீன் விற்பனையை ஊக்குவித்தல்.
* நீர் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு மீன்வளர்ப்புத் தொழில்நுட்பத் திறனை பயிற்சிகள்மூலம் உருவாக்குதல்.
*

## இனம் – இ பாசன வேளாண்மைக்கான அமைப்பினை நவீனப்படுத்துக்.

நவீன முறையில் திறமையாக வரைமுறைக்குட்பட்ட பாசன சேவையை அளிக்க நிறுவன அமைப்பினை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். இவை தொடர்பான பணிகள் நீர்வள ஆதாரத் துறை மற்றும் பாசன நீர் பயனீட்டாளர்கள் சங்கம் மூலமாகவும் செயல்படுத்தப்படும். சுற்றுச்சூழல் மற்றும் சமூக அமைப்புகளுக்கு ஏற்ப நீர்வள ஆதார துறையின் நிறுவன அமைப்புகளை முக்கிய நீர் பயனீட்டாளர்கள் சங்கங்களுடன் விவாதித்து வடிவமைத்து நீர் நிலைகள் மேம்படுத்தப்படும்.



## நீர் பயனீட்டாளர் சங்கத் (WUA) தேர்தல்கள்:



* நீர்வள ஆதாரத் துறையில் உள்ள அனைத்து அலுவலகங்களையும் இணையதளம்மூலம் இணைத்து ஒருங்கிணைக்கப்பட்டுத் தகவல் பரிமாற்றத்திற்கு வழிவகுக்க LAN மற்றும் WAN இணைப்புகள் மேற்கொள்ளப்படும்.
* ஆலோசனை மற்றும் பயிற்சி அளித்தல், விவசாயிகளுக்கான சுற்றுலா மற்றும் கருத்தரங்கங்களுக்கு ஆதரவளித்தல்.
* விவசாயிகள் பங்கு கொள்ளும் பாசன மேலாண்மை, மற்றும் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பயிற்சிப் பிரிவுகளை அமைத்தல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு பணிகளுக்காகப் பாசன ஆராய்ச்சி நிதியை ஏற்படுத்துதல்.

## திட்டச் செயலாக்கம்:

இத்திட்டம் 6 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். முக்கிய செயலாக்கத் துறைகளான நீர்வள ஆதாரத்துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மை விற்பனைத்துறை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைகளால், பல்முனைத் திட்டப் பிரிவு (MDPU) அளிக்கும் நிர்வாகத் ஊக்குவிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வாயிலாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 2007–08ஆம் நிதி ஆண்டிலிருந்து ரூ. 2547 கோடி (US $ 566m) திட்ட மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுள்ளது.